1991 அக்டோபர் 4]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக வருடாந்திரத்திற்கு சுமார் 30 ஆயிரம் வீடுகள் அளவுக்கு கடன் தொகை வழங்கப் பட்டிருக்கிறது. மேலும் இந்த கடன் தொகைகள் அரசின் மானியத்தின் மூலமும், ஹட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படுகின்ற தொகையை வைத்தும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தற்போது இருக்கின்ற நிலையே போதுமென்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 159. திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

முற்பகல் 10-25

159—

சேலம் மாவட்டத்தில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க நடவடிக்கை.

*3355—திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சராசரியாக பெய்யவேண்டிய மழையளவு சேலம் மாவட்டத்தில் குறைந்ததன் காரணமாக ஆழ்துளைக் கிணறுகளும் வறண்டு சேலம் மாவட்டம் முழுவதும் கடுமை யான குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தக்க நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் சராசரியாகப் பெய்ய வேண்டிய மழை அளவு குறைந்துவிட்டது. இந்த ஆண்டு மட்டுமல்ல, தொடர்ந்து 4, 5 ஆண்டுகளாகவே மழை அளவு குறைந்துவிட்டது. என்பதால் நிலத்தடி நீர் அதிகமாக வறண்டு கிடக்கின்ற இந்தச் சூழ்நிலையில், நிலத்தடி

நீர் வற்றண்டு போயுள்ள சேலம் போன்ற மாவட்டங்களையும், ஆழ் குழாய்க் கிணறுகளில் அதிகமாகத் தண்ணீர் உள்ள மற்ற மாவட்டங்களையும், எவ்வாறு வித்தியாசப்படுத்தி, சேலம் மாவட்டத்தின் நீர்ப் பிரச்சினையைப் போக்க அரசு திட்டமிட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சராசரி மழை அளவைவிட இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்பது உண்மை. இதனால் நிலத்தடி நீர் மட்டம் கடந்த ஆண்டு 31 மீட்டர் ஆழத்திலிருந்து 33 மீட்டராகத் தாழ்ந்திருக்கிறது. அதைக் கருத்திற்கொண்டு கடும் குடிநீர்ப் பஞ்சம் நிலவி வருகின்ற காரணத்தால், அதை மாற்றுவதற்கு, மற்ற மாவட்டங்களைக் காட்டிலும், ஆகஸ்ட் மாதம் முடிய இந்த மாவட்டத்திற்கு மட்டும் குடிநீர்ப் பஞ்சத்தைச் சமாளிக்க மொத்தம் 230 லட்சத்து 50 ஆயிரம் அந்தப் பணிகளுக்காக வழங்கி இருக்கிறது.

மேலும் கிராமக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டுக்கு மட்டும் 543 இலட்சத்து 60 ஆயிரம், சுமார் 626 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் சுமார் 300 குடியிருப்புகளுக்குப் பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. இதுவரையில் மட்டும் சுமார் 430 இலட்சம் ரூபாய் இதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே குடிநீர் வசதியற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக ஓரளவு குடிநீராவது ஏற்படுத்த வேண்டுமென்று உத்தர விடப்பட்டு, அதன் அடிப்படையிலே சுமார் 126 ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும், 33-க்கும் மேற்பட்ட பழங்குடியினர் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 85 சதவிகிதம் பணிகள் முடிவு அடைந்துவிட்டன. ஆகவே தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துப்படி குடிநீர்ப் பஞ்சம் இந்த மாவட்டத்தில் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.